


**13. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பில் பொருளாதாரம் மற்றும் உற்பத்தி துறைகள் மிக முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தேசிய கல்வி கொள்கை தற்சார்பை வலியுறுத்துவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. உலக அளவில் கட்டுமான துறையின் மிகப்பெரிய பொறுப்புகளில் தமிழக பொறியாளர்கள் சிறந்து விளங்குவதாக துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

4. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அனைத்து துறைகளிலும் பயன்படுத்துவதன் அவசியத்தை மாநில அமைச்சர் திருமதி கீதாஜீவன் வலியுறுத்தியுள்ளார்.

5. ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் இறுதி போட்டிக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிரான்ஷெட்டி இணை முன்னேறியது.

## இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

நாட்டின் பாதுகாப்பில் பொருளாதாரம் மற்றும் உற்பத்தி துறைகள் மிக முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மிசோரம் மாநிலத்தில் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை காணொலி மூலம் இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், வளர்ச்சி திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக தெரிவித்தார்.

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கைகள் நாட்டின் சுய சார்பை பறைசாற்றுவதுடன் முப்படையினர் மீதான நமது நம்பிக்கையை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் மக்களின் வாழ்க்கை மட்டுமல்லாமல் வர்த்தகத்தையும் எளிமையாக்குவதாக கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 7.8 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் உலகின் மிக விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குவதாக கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கூறிய பிரதமர், சாலை, மின்சாரம், குடிநீர், எரிவாயு இணைப்பு, இணைய வசதி உள்ளிட்டவை இப்பகுதி மக்களுக்கு பெரும் பயனளிப்பதாக கூறினார்.

இன்று தொடங்கப்பட்ட பைராபி - சாய்ரங் இடையேயான புதிய ரயில்பாதை, இப்பகுதி பொருளாதாரத்தை மேம்படுத்தும் என கூறிய பிரதமர், வடகிழக்கு பொருளாதார வழிதடத்தில் மிசோரம் முக்கிய பங்குவகிப்பதாக கூறினார்.

தொடர்ந்து இன்று பிற்பகல் மணிப்பூர் செல்லும் பிரதமர் அம்மாநிலத்தின் வளர்ச்சிக்கான 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் திட்ட பணிகளை தொடங்கி வைத்து இம்பாலில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

**********

**தர்மேந்திரபிரதான்**

நாட்டின் புதிய தேசிய கல்வி கொள்கை தற்சார்பை வலியுறுத்துவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஒடிசா மாநிலம் சம்பல்பூர் பல்கலைகழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அமைச்சர் பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையில் கல்வி துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

புதிய கல்வி கொள்கையில் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் இதன்மூலம் நுட்பமான கற்றல் திறன் அதிகரிப்பதாக கூறினார்.

**********

**எல்.முருகன்**

பஞ்சாப் மாநிலத்தில் அண்மை மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இன்று நேரில் ஆய்வு செய்கிறார்.

சட்லஜ் ஆற்றங்கரையோர கிராமங்களில் கள ஆய்வு மேற்கொள்ளும் அமைச்சர் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிகிறார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப் மாநிலத்திற்கு மத்திய அரசு ஏற்கனவே ஆயிரத்து 600 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிய நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுடன் மத்திய அரசு துணை நிற்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

**********

**கடலோர காவல்படை**

5ஆவது உலகளாவிய கடலோர காவல்படை உச்சிமாநாட்டை சென்னையில் நடத்த இந்தியாவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2027ஆம் ஆண்டு நடைபெற உள்ள இந்த உச்சிமாநாடு கடலோர மற்றும் கடல்சார் பாதுகாப்பில் நாட்டின் தலைமைத்துவத்தை முன்னிறுத்த இது வகை செய்வதாக கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

**********

## GST

மத்திய அரசின் அடுத்த தலைமுறைக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதி நடைமுறைக்கு வரவுள்ள நிலையில்,

வேளாண் பொருட்களுக்கான GST விலை குறைப்பு பெரிதும் பயனளிப்பதாக திருவையாறை சேர்ந்த வாழை விவசாயி தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**கட்டுமான பொருட்கள் மீதான GST விலை** குறைப்பால் சாமானிய மக்கள் பெரிதும் பயனடைவதாக விழுப்புரத்தை சேர்ந்த கட்டுமான ஒப்பந்ததாரர் கூறுகிறார்.

**வாய்ஸ்**

**********

## முதலமைச்சர்

தமிழகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பெறப்படும் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணுமாறு அதிகாரிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இத்திட்டம் தொடர்பாக இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர், மாநிலம் முழுவதும் முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் மக்கள் கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்குமாறு கூறினார்.

**********

## இளையராஜா

பிரபல திரைப்பட இசையமைப்பாளர் இளையராஜாவின் 50ஆண்டு கால திரைசேவையை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் பாராட்டு விழா இன்றுமாலை நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் இளையராஜாவின் சிம்போனி இசை நிகழ்ச்சியும் இடம்பெறுகிறது.

**********

தமிழக அரசு

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உலக தரத்திலான உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அறிவுசார் பெருவழிதட திட்டத்தின் கீழ், ஒசூர் - பாகலூர் நெடுஞ்சாலை, சுற்றுசாலை, சேட்டிலைட் சாலைகளில் மாநில தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் சிறந்த உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**********

உதய நிதி

உலக அளவில் கட்டுமான துறையின் மிகப்பெரிய பொறுப்புகளில் தமிழக பொறியாளர்கள் சிறந்து விளங்குவதாக துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழில்முறை மேம்பாடு மாநாடு மற்றும் கண்காட்சி 2025-ஐ சென்னை நந்தம் பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அணைகள் உள்ளிட்ட மிகப்பெரிய கட்டுமானங்களை தமிழர்கள் திறம்பட நிறைவேற்றியுள்ளதாக கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பன்முக திறன் வாய்ந்த தமிழக பொறியாளர்கள், மாநிலத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுவதாக எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் முதல் தலைமுறை பொறியியல் மாணாக்கருக்கு நிதியுதவி வழங்குவதுடன் அவர்களை தொழில்முனைவோராக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக துணை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**********

**கீதாஜீவன்**

தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அவசியத்தை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயிற்சி முகாமை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த தொழில்நுட்பம் குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை என கூறினார்.

இதுகுறித்த விழிப்புணர்வு மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று கூறிய அவர் அன்றாட வாழ்க்கைக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மிகவும் பயனளிப்பதாக தெரிவித்தார்.

**********

**லோக் அதாலத்**

தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் தமிழகத்தில் இன்று நடைபெறுகிறது.

காசோலை மோசடி, வாகன விபத்து இழப்பீடு, ஜீவனாம்சம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள பல்வேறு வழக்குகளுக்கு இதில் சமரச முறையில் தீர்வு காணப்படுகிறது.

விழுப்புரம், பெரம்பலூர், ஈரோடு, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் லோக் அதாலத்தில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக 8 அமர்வுகளில் லோக் அதாலத் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**அணை**

**விழுப்புரம் மாவட்டம் சாத்தனூர் அணை** முழு கொள்ளளவை எட்டிய நிலையில் அணையிலிருந்து 10 ஆயிரம் கன அடி தண்ணீர் வரை வெளியேற்றப்படும் என்பதால் தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதனிடையே திண்டிவனம், விக்கிரவாண்டி உள்ளிட்ட பகுதிகளில் கன மழைகாரணமாக சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் நீர்தேங்கியுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று** வினாடிக்கு 19 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து** வினாடிக்கு 18 ஆயிரம் கன அடியாக உள்ளது.

**வாரவிடுமுறை நாட்களை ஒட்டி தென்காசி** மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பிரதான அருவி, ஐந்தருவி, சிற்றருவி, உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சீரான தண்ணீர் வரத்தால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் நீராடி செல்கின்றனர்.

**********

இருவரி

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே அரசால் தடைசெய்யப்பட்ட போதை பொருட்களை விற்பனை செய்த 3 பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த ஆதி திராவிடர் பழங்குடியின வகுப்பை சேர்ந்த மாணாக்கர் ஜெர்மன் மொழி தேர்விற்கான பயிற்சி பெற இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் TNPSC குரூப் 1 முதன்மை தேர்விற்கு பயிற்சி பெற விரும்பும் ஆதி திராவிட பழங்குடியின வகுப்பை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

மாணாக்கர் தாங்கள் விரும்பும் பயிற்சி நிறுவனத்தை தேர்வு செய்து பயிற்சிபெறலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி கும்மிடிபூண்டி சுற்றுவட்டார பகுதிகளில் நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ளூர் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**********

பேட்மிண்டன்

ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் இறுதி போட்டிக்கு இந்தியாவின் ரான்கிரெட்டி, சிரான்ஷெட்டி இணை முன்னேறியது.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் இந்த இணை - தைவான் இணையை 21-17, 21-15 என்ற நேர் செட்களில் வென்றது.

ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் இன்று இந்தியாவின் லக்ஷயாசென் -தைவானின் **Tien Chen Chou**-ஐ எதிர்கொள்கிறார்.

**********

## மகளிர் ஹாக்கி

சீன ஹாங்சூவில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பிற்பகல் ஜப்பானை எதிர்கொள்கிறது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**